100 கி.மீ. மின் பாதை ரூ.300 கோடி மதிப்பீட்டில் புதைவடங்களாக மாற்றப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

8. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் உள்ள 250 உதவிப் பொறியாளர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும். மேலும், இந்த நிதியாண்டிலிருந்து இயக்கப்படவிருக்கும் வடசென்னை அனல் மின் நிலையம் நிலை–III–க்காக 150 உதவிப் பொறியாளர் பதவிகள் உருவாக்கப்பட்டு, நேரடி பணி நியமனம்மூலம் நிரப்பப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

9. தமிழ்நாடு எரிசக்தி முகமைக்கு 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு சொந்தக் கட்டடம் கட்டப்படும். இது ஒரு, மாதிரி பசுமைக் கட்டடமாகத் திகழும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. பள்ளிக் கல்வித் துறை, உயர் கல்வித் துறை மற்றும் எரிசக்தித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அமைதி, வளம், வளர்ச்சி' என்ற தாரக மந்திரத்தைத் தன் நெஞ்சிலே ஏந்தி, தமிழகத்திலே வாழ்ந்துகாட்டி, இன்றைக்கு நம் நெஞ்சங்களில் நிறைந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன்.

'ஏழையாகப் பிறப்பதிலே தவறில்லை. ஆனால், ஏழையாகவே இறப்பதுதான் தவறு' என்ற தத்துவத்தை நிறைவேற்றுகின்ற வகையில், கல்விக்காக இவ்வளவு கோடி நிதியை ஒதுக்கியிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

2019 ஜூலை 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், நாட்டு மக்களுடைய எண்ணங்களை நிறைவேற்றுகின்றவகையில் விதி 110–ன்கீழ் இதுபோன்ற முக்கியமான திட்டங்களைக் கொண்டு வந்தார்கள். அதேபோல், தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள், 'நிலையான ஆட்சி, நிரந்தர வளர்ச்சி' என்ற அடிப்படையில், பல்வேறு புதிய திட்டங்களைக் கொண்டுவந்து, மின் வாரியத்தின் சார்பாக 9,825 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய மின் திட்டங்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்கள் கோருகின்றவாறு, துணை மின் நிலையங்கள் அதிகமாக அமைக்கப்பட வேண்டும் என்பதற்காகக் கிட்டத்தட்ட 56 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கும், புதிய உதவிப் பொறியாளர்களைத் தேர்வு செய்வதற்கும் புதிய அறிவிப்புகளை வெளியிட்டிருக்கின்றார்கள். இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய சார்பாகவும், துறையின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 12–15

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உயர் கல்வியை உயர்வான இடத்திற்குக் கொண்டு சென்றார்கள். இன்றைக்கு அதே வழியில், அதே நெறியில், விதி 110–ன்கீழ் பல்வேறு அறிவிப்புகளை அறிவித்து, அந்த உயர் கல்வியை உயர்ந்த இடத்திற்கு சிறிதும் தடம் பிறழாமல் கொண்டு சென்றிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு தமிழக மக்களின் சார்பாகவும், தமிழக மாணாக்கர்கள் சார்பாகவும், தமிழக உயர் கல்வித் துறையின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதற்கு உறுதுணையாக இருக்கக்கூடிய மாண்புமிகு தமிழகத்தினுடைய துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)